பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

18. 07. 2024 7. 15

வியாழக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. அக்னிபத் திட்டத்தின்கீழ் சேரும் ராணுவ வீரர்களுக்கு மாநில காவல்துறை, சிறைத்துறை வேலைவாய்ப்பில் 10 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படும் என்று ஹரியானா மாநில அரசு அறிவித்துள்ளது.

2. மகாராஷ்டிரா மாநிலத்தில் பாதுகாப்புப் படையினருக்கும், நக்சல் தீவிரவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலின்போது நக்சல் தீவிரவாதிகள் 12 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

3. காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பலத்த மழை பெய்து வருவதால் தமிழகத்துடனான காவிரி நதிநீர் பங்கீடு பிரச்சினை சீரடையும் என்று கர்நாடக துணை முதலமைச்சர் திரு. டி.கே. சிவகுமார் தெரிவித்துள்ளார்.

4. ஓமன் அருகே நடுக்கடலில் எண்ணெய்க் கப்பல் கவிழ்ந்ததில் காணாமல் போன 13 இந்தியர்களில் 8 இந்தியர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

5. ஹம்பர்க் ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் ரோஹன் போபன்னா - ஸ்ரீராம் பாலாஜி இணை இன்று ஜெர்மனி இணையை எதிர்கொள்கிறது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

அக்னிபத் திட்டத்தின்கீழ் சேரும் ராணுவ வீரர்களுக்கு மாநில காவல்துறை, சிறைத்துறை மற்றும் சுரங்கத் துறை வேலைவாய்ப்பில் 10 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படும் என்று ஹரியானா மாநில அரசு அறிவித்துள்ளது.

சண்டிகரில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அம்மாநில முதலமைச்சர் திரு. நயாப்சிங் சைனி இதனைத் தெரிவித்தார்.

மேலும் ஹரியானா மாநில அரசின் பல்வேறு துறைகள் மற்றும் வாரியங்கள் மற்றும் மாநகராட்சி வேலைவாய்ப்பில் முன்னுரிமை அடிப்படையில் அக்னிபத் திட்ட ராணுவ வீரர்களுக்கு பணி வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இத்தகைய வீரர்களுக்கு மாதச் சம்பளமாக 30 ஆயிரத்திற்கும் அதிகமான தொகை சம்பளமாக வழங்கப்படும் என்றும், வேலைவாய்ப்பு வழங்கும் நிறுவனங்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 60 ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அக்னி வீரர்களுக்கு 5 லட்சம் ரூபாய் வட்டியில்லாக் கடன் வழங்கப்படும் என்றும், முன்னுரிமை அடிப்படையில் ஆயுத உரிமை வழங்கப்படும் என்றும், விபத்துக்களின்போது உயிரிழந்தால் சாலைப் போக்குவரத்து நெடுஞ்சாலை திட்டத்தின்கீழ் இழப்பீடும், காயமடைந்தால் மருத்துவமனைகளில் இலவச சிகிச்சையும் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

<<<<>>>>

மகாராஷ்டிரா மாநிலத்தில் காவல் துறையினருக்கும், நக்சல் தீவிரவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலின்போது நக்சல் தீவிரவாதிகள் 12 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

சத்தீஸ்கட் மாநிலை எல்லையை ஒட்டியுள்ள பகுதியில் நேற்று மாலை நக்சல் தீவிரவாதிகளின் நடமாட்டம் இருப்பதாக வந்த தகவலையடுத்து, அந்தப் பகுதிக்கு காவல்துறையினர் விரைந்து சென்றனர்.

அப்போது அடர்ந்த வனப்பகுதியில் காவல்துறையினர் மீது நக்சல் தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டதாகவும், காவல்துறையினர் தற்காப்புக்காக சுட்டபோது 12 நக்சல் தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் கட்சிரோலி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. நிலோத்பால் தெரிவித்தார்.

மோதல் நிகழ்ந்த இடத்தில் இருந்து நக்சல் தீவிரவாதிகள் 12 பேரின் சடலங்களையும், 3 ஏ.கே-47 ரக துப்பாக்கிகள், 2 கைத்துப்பாக்கிகள், தோட்டாக்கள் ஆகியவற்றை பாதுகாப்புப் படையினர் கண்டெடுத்தனர்.

இந்த மோதலின்போது காவல்துறை சார்பில் உதவி ஆய்வாளர் ஒருவர் காயமடைந்தார்.

அவருக்கு நாக்பூர் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

கடந்த சில ஆண்டுகளில் காவல்துறையினர் மேற்கொண்ட மிகப்பெரிய நடவடிக்கை இது என்று மகாராஷ்டிர மாநில துணை முதலமைச்சர் திரு. தேவேந்திர பட்னாவிஸ் தெரிவித்துள்ளார்.

மிக துணிச்சலுடன் செயல்பட்ட மாநில காவல் துறையினருக்கு 51 லட்சம் ரூபாய் வெகுமதி வழங்கப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தனது பதவிக் காலத்தின் முதல் ஆண்டு பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய முக்கியமான உரைகளின் தொகுப்புகள் அடங்கிய புத்தகத்தை இன்று புதுதில்லியில் மத்திய அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌஹான் வெளியிடுகிறார்.

தில்லியில் நடைபெறும் விழாவில் மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் உட்பட பலர் கலந்துகொள்கிறார்கள்.

**Wings to Our Hopes** என்ற தலைப்பில் இந்த புத்தகத்தை மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் பதிப்பக பிரிவு வெளியிட்டுள்ளது.

இந்த புத்தகம் ஹிந்தி மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடப்படுகிறது.

<<<<>>>>

கல்லூரி உணவகங்களில் ஆரோக்கியமற்ற உணவுப் பொருட்களை விற்கக்கூடாது என்று பல்கலைக்கழக மானியக் குழு அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அக்குழுவின் செயலாளர் திரு. மணீஷ் ஜோஷி, அனைத்து உயர்கல்வி நிறுவனங்களுக்கும் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளார்.

அதில் இந்தியாவில் நான்கில் ஒருவருக்கு உடல் பருமன், சர்க்கரை நோய்க்கு முந்தைய நிலை போன்ற பாதிப்புகள் இருப்பது, இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழுமத்தின் அறிக்கையில் தெரியவந்துள்ளதால் மாணவர்களின் உடல் நலனைப் பேணுவது அவசியம் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி உயர்கல்வி நிறுவனங்களில் உடல் நலனுக்கு ஆரோக்கியமற்ற உணவுப் பொருட்களின் விற்பனைக்கு தடை விதிக்க வேண்டும் என்றும், ஊட்டச்சத்து மிக்க உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதை ஊக்கப்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அதிக கொழுப்பு, உப்பு, சர்க்கரை, அதிக நாட்கள் பதப்படுத்தப்பட்டு பயன்படுத்தப்படும் உணவுப் பொருட்கள் பயன்பாட்டைக் குறைக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

<<<<>>>>

கர்நாடகாவில் காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பலத்த மழை பெய்து வருவதால் தமிழகத்துடனான காவிரி நதிநீர் பங்கீடு பிரச்சினை சீரடையும் என்று கர்நாடக துணை முதலமைச்சர் திரு. டி.கே. சிவகுமார் தெரிவித்துள்ளார்.

பெங்களூருவில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பலத்த மழை காரணமாக கர்நாடகாவில் காவிரி நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பல அணைகளுக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதாக தெரிவித்தார்.

இதனால் நாள்தோறும் தமிழகத்திற்கு ஒரு டி.எம்.சி. தண்ணீர் வழங்கப்பட வேண்டும் என்ற காவிரி நடுவர் மன்றத்தின் உத்தரவுக்கு அதிகமாகவே தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதாக திரு. சிவகுமார் கூறினார்.

இந்நிலையில் தமிழகத்திற்கு காவிரியில் வரும் தண்ணீரின் அளவு 30 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக ஒகேனக்கல் காவிரியாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

அருவிகளில் சுற்றுலாப் பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் கடைகளில் தமிழில் பெயர்ப்பலகை வைக்க தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டத்தில் பவானிசாகர் அணை கட்ட காரணமாக இருந்த சுதந்திரப் போராட்ட தியாகியும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான மறைந்த எம்.ஏ. ஈஸ்வரன் நினைவாக கட்டப்பட்டு வரும் அரங்கத்தின் கட்டுமானப் பணிகளை நேற்று ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் பேசினார்.

<<<<>>>>

ஓமன் அருகே நடுக்கடலில் எண்ணெய்க் கப்பல் கவிழ்ந்ததில் காணாமல் போன 13 இந்தியர்களில் 8 இந்தியர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

இலங்கையைச் சேர்ந்த ஒருவரும் மீட்கப்பட்டுள்ளார்.

காமரோஸ் நாட்டின் எண்ணெய்க் கப்பல் ஒன்று நேற்று முன்தினம் ஓமன் அருகே நடுக்கடலில் பழுதாகி மூழ்கியது.

இதில் சிப்பந்திகளாக பணியாற்றிய இந்தியர்கள் 13 பேரும், இலங்கையைச் சேர்ந்த 3 பேரும் கடலில் மூழ்கினர்.

இதையடுத்து அவர்களை மீட்க விரைந்த இந்திய கடற்படை கப்பலான **TEG,** இந்தியர்கள் 8 பேர் உட்பட 9 பேரை பத்திரமாக மீட்டது.

மேலும் 7 பேரை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்திய கடற்படையினர் ஓமன் கடல்சார் பாதுகாப்பு மையத்துடன் ஒருங்கிணைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளதாக மஸ்கட்டில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

கர்நாடகாவின் தெற்குப் பகுதி, கடலோரப் பகுதி, குஜராத் மாநிலத்தில் சௌராஷ்டிரா, கட்ச் மற்றும் மகாராஷ்டிராவில் கொங்கன், கோவா உள்ளிட்ட பகுதிகளில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கேரளா, கடலோர ஆந்திரா உள்ளிட்ட பகுதிகளின் ஒருசில இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தராகண்ட், குஜராத் மற்றும் கிழக்கு ராஜஸ்தான் பகுதிகளில் கனமழை பெய்யும் என்றும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், மேற்குதிசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழகத்தின் ஒருசில இடங்களிலும், புதுவை, காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி, கோவை மாவட்ட மலைப் பகுதிகளின் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழை பெய்யும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கனமழை காரணமாக வால்பாறையில் பள்ளிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

பொள்ளாச்சி மற்றும் வால்பாறை பகுதிகளில் கடந்த ஒரு வாரமாக கனமழை பெய்து வருகிறது.

<<<<>>>>

ஹம்பர்க் ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் ரோஹன் போபன்னா - ஸ்ரீராம் பாலாஜி இணை இன்று ஜெர்மனியின் **Jakob Sehnaitter – Mark Wallner** இணையை எதிர்கொள்கிறது.

இப்போட்டியில் பங்கேற்றுள்ள மற்றொரு இந்திய இணையான விஜய் சுந்தர் பிரசாந்த் - ஜீவன் நெடுஞ்செழியன் இணை, ஜெர்மனியின் **Tim Putz – Kevin Krawietz** இணையை எதிர்கொள்கிறது.

<<<<>>>>

நியூசிலாந்தில் நடைபெற்று வரும் காமன்வெல்த் ஜூனியர் வாள்வீச்சு போட்டியில் இந்தியாவின் ஷ்ரேயா குப்தா வெண்கலப் பதக்கம் வென்றார்.

<<<<>>>>

ஸ்வீடிஷ் ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் சுமித் நாகல் இன்று அர்ஜென்டினாவின் **Mariano Navone**-ஐ எதிர்கொள்கிறார்.

<<<<>>>>

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் வெளியிட்டுள்ள ட்வெண்ட்டி ட்வெண்ட்டி தரவரிசைப் பட்டியலில் இந்தியாவின் சூர்யகுமார் யாதவ் தொடர்ந்து இரண்டாவது இடத்தில் நீடிக்கிறார். யசஷ்வி ஜெய்வால் 6வது இடத்தில் உள்ளார்.

**<<<<The End>>>>**